கலைஞரின் உவமை நயம்

பாரதி பதிப்பகம்

கலைஞரின்
உவமை நயம்

பெரியார்-நாகம்மை
சென்னை-98

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017,

மூன்றாம் பதிப்பு : நவம்பர், 1991

தொகுப்பு நூல்

விலை: ரூ. 3-00

அச்சிட்டோர் :
செல்வம் எண்டர்பிரைசஸ்,
சென்னை—94.

கலைஞரின் உவமை நயம்

அவள் தன் முத்தத்தால் துடைத்தாள் – காதலன் கன்னத்திலே!

உவமை : 'நெற்கதிர்களைக் களத்தில் போட்டு கீழே அடிப்பதுபோல, வீரன் புலியை பலமுறை தரையில் அடித்தான். புலி தோல்வியுற்றது.'

உன்னத நயம் : வளமை குலுங்கிடும் வயற்காடுகள் பொன்முத்துக்களைச் சுமந்து நிற்கும் நெற்றாட்களின் மீது கதிரவனின் ஒளிபட்டு ஜரிகையென மின்னுகின்றன. வயலின் பக்கத்தேயுள்ள பசும் புற்றரைகளில் கொழுத்த பசுக்களும், அவைகளோடு கொஞ்சிக் குறும்பு விளைக்கும் கொழுந்துக் கன்றுகளும் காட்சி தருகின்றன.

மலர்களிலே பனி தூங்க - கனி தாங்கியபடி மரங்கள் நின்றிட – தோகை விரித்த மயிலும் – துள்ளியாடும் மானும் – கானம் எழுப்பும் குயிலும் – களிநடம் புரியும் சிறுமியரும் எழிலூட்டி – சோலைகள் காட்சி வழங்குகின்றன.

எங்கிருந்தோ ஒரு தேன் குரல் கிளம்புகிறது. குயில் கவனிக்கிறது, வாய் அடைத்துப்போய்! மயில் ஆடாமல் நின்றுவிட்டது, மயக்கத்தால்! மானும் மழலை மொழியினரும் குரல் வந்த திக்கு நோக்கி திறந்த கண்ணை மூடாமல் நிற்கின்றனர்.

''சிங்கமும் மானும் உலவுங் காடு
செந்தமிழ்த் திருநாடு......
எங்கும் இல்லையே இதற்கொரு நாடு
இந்த உலகினில் ஈடு...''

இசையை முன்னே அனுப்பி தொடர்ந்து வந்தாள் மேடைக்கு, அந்த துள்ளும் இளமை அள்ளும் அழகு சேர்

ஆரணங்கு. ஒடிந்துவிழும் கொடியிடை, ஒய்யார நடனமாயிருந்தது. அவள் பாடினாள், பாடினாள், பாடிக்கொண்டேயிருந்தாள். அழகு சதிராடும் அவள் விரல்கள் வழியே விழியை எங்கேயோ தூதுவிடுத்தாள். தூது முடிவதற்கு முன் புலியொன்று பாய்ந்தது மேடையில். புலியைத் தொடர்ந்து அவள் எதிர்பார்த்த வீரனும் பாய்ந்தான். அந்தப் புதுமொழியாள் சிறிது கலங்கினாள். வீரன் பேச ஆரம்பித்தான்.

வீரன் : வஞ்சிக் கொடியே! அஞ்சாதே! புலியை அடக்கினால்தானே இந்தப் புள்ளிமானை அணைக்க முடியும் என்னால்! இதோ பார்.

வீரன் புலியின் மீது பாய்ந்தான். பயங்கரமான போராட்டம் நடைபெற்றது. புலியின் நீண்ட கோரமான நகங்கள் அவன் இருதயத்தைப் பெயர்த்தெடுக்க முயற்சி செய்தன. புலியின் அகண்ட வாய்க்குள் அவன் வணங்கா முடி அகப்பட்டுக் கொள்ளுமோ என்று அவள் துடித்தாள். புலியின் கால்களை வீரன் பிடித்துக்கொண்டான். நெற்கதிர் களைக் களத்தில் போட்டு கீழே அடிப்பதுபோல, வீரன் புலியைப் பலமுறை தரையிலே அடித்தான். புலி தோல்வி யுற்றது. அதைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு காதலியிடம் சென்றான். காதலன் கன்னத்திலே புலியின் பற்களால் ஏற்பட்ட ரத்தத்தையெல்லாம் அவள் தன் முத்தத்தால் துடைத்தாள். அப்போது காதலியின் தகப்பன் அங்கு ஓடி வந்தான். வயது சென்ற கிழவன். ஆனால் வாட்டமற்றமேனி. அவன் கையில் வில்லும் அம்புப் பெட்டியும் இருந்தது. அந்த அம்புப் பெட்டி மீன் வடிவத்திலே செய்யப்பட்டிருந்தது.

வீரன் கையிலே வில்லையும், மீன் வடிவ அம்புப் பேழையையும் தந்தான். வீரனும் புன்னகையுடன் கைநீட்டி பெற்றுக் கொண்டான்.

கிழவன் : திராவிட வீரனே! திண்தோளனே! ஆகாகா, உன்னைப் பார்க்க
உலகப்பனாகிய நான் செய்த பேறு பெரும்பேறு! ஒரு கையிலே வில்!
ஒரு கையிலே புலி! தோளிலே மீன்வடிவ அம்புப் பேழை! புலி—வில்—
கயல் கொண்ட வீரனே... இதோ என் மகள் தமிழ் என்னும் பொன்னார்
மேனியளை உனக்கு அளிக்கிறேன்—வாழ்க நீவீர் வளமெலாம் பெற்று!

உடனே மான்—மயில் நடனம் ஆரம்பமாகிறது. மழலைக் குழந்தைகள் குதிக்கின்றனர், உற்சாக மிகுதியால். குயில் கூவுகிறது. மலர்கள் அவர்கள் கழுத்தில் மாலை களாக மாறி விடுகின்றன.

''வாழ்க வாழ்கவே!
வலிமை மீக்க வீரர் வாழ்கவே!''
வளமை கொண்ட தமிழை வாழ்வில்
துணையாகக் கொண்ட வீரர் வாழ்கவே!''

(காட்சி முடிகிறது)

கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி!

உவமை : 'ஆடிவந்த சிறுமிபோல் பெருமூச்சு
வாங்குகின்றாய் ஆண் மகனா நீ தம்பி!'

உன்னத நயம் : குடிசைதான் ஒரு புறத்தில் கூரிய வேல், வாள்
வரிசையாய் அமைந்திருக்கும்,
வையத்தைப் பிடிப்பதற்கும்,
வெம்பகை முடிப்பதற்கும்,

வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும், மிளிரும்
புலியின் குகையினிலே அழகில்லை; புதுமையல்ல.
கிலியும் மெய் சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்
தலை காட்டா; மானத்தின் உறைவிடம்,
மறவன் மாளிகை.
இல்லத்து வாயிலிலே கிண்ணத்துச் சோறோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள்
வழியனுப்ப
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி.
ஓடி வந்தான் ஒரு வீரன் ஒரு சேதி பாட்டி, என்றான்
''ஆடிவந்த சிறுமி போல் பெரு மூச்சு வாங்குகின்றாய்
ஆண் மகனா நீ தம்பி!
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்,—பின்
பேச்சுக்குத் துவக்கம் செய்'' என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி!

அவருக்குப் பிறந்தானா? அடடா! மானமெங்கே!

உவமை : 'தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவ
துண்டு—
களமும் அதுதான்;

உன்னத நயம் : ''வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி, உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு.
மடிந்தான் உன்மகன் களத்தில்'' என்றான்
மனம் ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க் கிழவி
ஒருமுறை.
''தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவ
துண்டு—
களமும் அதுதான்;
காயம் மார்பிலா முதுகிலா?'' என்றாள்

'முதுகில்' என்றான்.
கிழவி துடித்தனள், இதயம் வெடித்தனள்
வாளை எடுத்தனள்.
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம்.
கோழைக்குப் பால் கொடுத்தேன்—குப்புற
வீழ்ந்து கிடக்கும்,
மோழைக்குப் பெயர் போர் வீரனாம்.
முன்பொருநாள் பாய்ந்து வந்த ஈட்டிக்கு
பதில் சொல்ல மார்பைக் காட்டி
சாய்ந்து கிடந்தார், என் சாகாத
கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானா! அடடா!
மானமெங்கே!

அறுத்து எறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை!

உவமை : ''மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை;
மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு.''

உன்னத நயம்: குட்டிச் சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான்.
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்!
அதுவும் மானம் மானமென்றே முழங்கும்.
மதுவும் சுராவும் உண்டு வாழும் மானமற்ற
ஆரியத்தின் வம்சமா நீ? ஏடா?
மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவிவிட்டாய்.
தின்று கொழுத்தாய், திமிர் பாய்ந்த
தோள்கள் எங்கே?
தின வெடுக்க வில்லையோ; அந்தோ!
என்று கதறினாள், எண்பதை நெருங்கிய
ஏழைக்கிழவி,
சென்றங்கு செருமுனையில் சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப்
பார்த்தாள் அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க ஓடிற்று இரத்த
வெள்ளம்
பிணக் குவியலிலே பெருமூச்சு வாங்க
நடந்தாள்

''மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை;
மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு''
அவன் அழிந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு
காட்டி
அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த
மார்பை
அடடா! கருத்தறியப் பொய் சொன்ன
கயவன் எங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?''

இந்த வீர இசையைத் தலைவர் முடித்தார். பந்தல் அதிர்ந்தது, கைதட்டல். கையொலி ஓய்ந்த பிறகு தலைவர் சொன்னார். ''இந்தப் பாட்டு நான்எழுதியதில்லை. இதோ இருக்கிறாரே இந்த மணமகன் எழுதியது'' என்று உற்சாகத்தோடு உரைத்தார். மீண்டும் பந்தல் அதிர்ந்தது. பக்கத்திலிருந்த புதுப்புறாவின் இளங்கன்னங்கள் ரோஜாவாயின. இதயம் எப்படி மலர்ந்ததோ, யாரறிய முடியும்! தலைவர் வாழ்த்துரையை முடித்தார். பரிசுகள் வழங்கும் படலம் ஆரம்பமாயிற்று. மணமகளின் உள்ளத்தை அருகிருந்த மணமகனை விட அதிகமாக உணரக் கூடிய சக்தி வாய்ந்த ஓர் உருவம் அந்தப் பந்தலிலே அமர்ந்திருந்தது. அதுதான் மணமகளின் தோழி விஜயா. கமலாவும் விஜயாவும் கல்லூரியில் மட்டுமல்ல; இளமையிலேயே இணை பிரியாதவர்கள். விஜயா வாழ்க்கைப் பாதையிலே பயணம் நடத்திக் கொண்டிருப்பவள். கமலா இன்றுதான் அடியெடுத்து வைக்கிறாள், கந்தனின் கை கோர்த்தபடி. அறிஞர்களின் பாராட்டுக்குரிய ஓர் அன்புத் துணை தன் தோழிக்குக் கிடைத்தது கண்டு விஜயாவுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. அந்த ஆனந்தத்தில் மெய்மறந்திருந்தாள். கணவன் மணமேடையில் புகழ்ப்படும்போதெல்லாம் கமலா, விஜயாவைக் கெண்டைக் கண்ணால் பார்த்ததை விஜயா மட்டுமே உணரமுடிந்தது. பரிசளிப்புகளும் முடியுந்தருவாயிலிருந்தன. இன்ப வெள்ளத்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த விஜயா திடுக்கிட்டு எழுந்தாள். பரபரப்புடன் மணமேடைக்கு ஓடினாள். தன் கையில் இருந்த ஒரு தாள் சுருளைப் பிரித்தாள்.

''கண்ணே கமலா!... நீ அதிர்ஷ்டசாலி! இதைப் பெற்றுக்கொள், நம் அன்பின் அடையாளமாக. எந்த நெருக்கடி வந்தாலும் சரி, இந்த அன்புச் சின்னத்தை மறந்து விடாதே. சந்தனக் கிண்ணம்; உன் உள்ளம் சந்தோஷக் கிண்ணமாயிருப்பதை விளக்கும் சின்னம்'' என்று கூறிக் கொண்டே கமலாவைத் தழுவிக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். கமலாவும் கண்கலங்கி விட்டாள் சந்தோஷத்தால். வாழ்வின் ஆரம்ப விழா அரும்பிவிட்டது.

குடும்பம் குதூகலமாய் துவங்கியது. கமலா கொஞ்சம் பழமைப்பித்துப் பிடித்தவள். காதலர்களுக்குள் ஊடல் ஏற்படுவதெல்லாம் பழமை புதுமைச் சண்டையினாலேயே என்ற நிலைமை சில நாள் தொடர்ந்தது. பிறகு இருவருமே கடவுளர்களைக் கேலி செய்ய ஆரம்பித்தனர்.

''பரமசிவனையும் பார்வதியையும் தினம் தினம் பள்ளியறைக்குப் புல்லக்கில் தூக்கிக்கொண்டு போகிறார்களே பக்தர்கள்... ஆனால், அவர்களுக்குக் கணபதி, முருகன் இருவரைத் தவிர வேறு குழந்தைகள் பிறக்கவே இல்லையே! ஏன்?'' என்பான் கந்தன்.

''தெரியாதா உங்களுக்கு? அவர்கள் கர்ப்பத்தடை செய்துகொண்டார்கள்'' என்று சிரிப்பாள் கமலா.

கலைஞர் கருணாநிதியின் கடிதம்

உவமை : 'நம்மவர்கள்தாம் தமிழகத்தில் நமது வளர்ச்சியை சூரியனை மேகத்தால் மூடநினைப்பதுபோல இருட்டடிப்புச் செய்ய முனைகிறார்களே தவிர, உலகின் பல்வேறு நாடுகளில் நமது பணியின் பயன்பற்றிப் பேசப் படுகிறது.'

உன்னத நயம் :

முு. கருணாநிதி, நியூயார்க்

அன்புமிக்க அய்யா பெரியார் அவர்கட்கு, தங்கள் கருணாநிதி வணக்கம். இன்று நயாகரா நீர் வீழ்ச்சி பார்த்துவிட்டு, அமெரிக்காவில் மிக உற்சாகமாக கொண் டாடப்படும் 'நன்றி அறிவிப்பு நாள்' விழாவில் 'நயாகரா கிளப்' விருந்தினராக இருந்துவிட்டு நியூயார்க் செல்லும் வழியில் இந்த மடல் எழுதுகிறேன்.

தாங்களும் அம்மையாரும் நண்பர் வீரமணியும் நல மாக இருப்பீர்கள் என நம்புகிறேன். தங்களுக்குத் தேவைப்படும் ஓய்வுபற்றி நான் அதிகம் கூற வேண்டிய தில்லை.

சிகாகோ பல்கலைக் கழகத்தில் அரசியல் பிரிவில் அர சியல் கருத்தரங்கில் கலந்து உரையாற்றினேன். அங்கு தங்களைப் பற்றியும், நமது இயக்க வரலாறு பற்றியும், அண்ணாவைப் பற்றியும், இன்றையத் தமிழக அரசு பற்றியும் அமெரிக்க மாணவர்களும் பேராசிரியர்களும் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நம்மவர்கள் தாம் தமிழகத்தில் நமது வளர்ச்சியை, 'சூரியனை மேகத்தால் மூட நினைப்பது போல' இருட்டடிப்புச் செய்ய முனைகி றார்களே தவிர, உலகின் பல்வேறு நாடுகளில் நமது பணியின் பயன்பற்றிப் பேசப்படுகிறது.

சிகாகோ பல்கலைக் கழகத்தில் சுயமரியாதை இயக் கத்தின் வளர்ச்சி, தங்கள் ஓயாத தொண்டு, தங்கள் காலத்திலேயே கொள்கைகள் பெற்றுவரும் வெற்றி குறித்தெல்லாம் குறிப்பிட்டேன். பேச்சுக்குப் பிறகு தங்களைப் பற்றியும், தன்மான இயக்க வளர்ச்சி பற்றியும் நிறைய வினாக்கள் எழுப்பினார்கள். பதில்களை விளக்க மாக அளித்தேன்.

கண்ணில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந் தது. பயணத்தை முடித்துக்கொண்டு தங்களையும், தமி ழகத்து அன்பு முகங்களையும் காண டிசம்பர் முதல் வாரத்

தில் வந்து சேருகிறேன். அமெரிக்காவில் விஞ்ஞானக் கூடங்கள் பலவற்றையும் கண்டேன். அவைகளின் சிறப்புக்களை நேரில்தான் விளக்கவேண்டும்.

தங்கள் அன்பு மறவாத,

மு. கருணாநிதி.

தடை நீக்கி—படை நல்கும்
பெருநூல்- இராவணகாவியம்!

உவமை : 1. 'பழமையை அழித்துப் புதுமையைப் படைக்கும் புத்துலகச் சிற்பி கவிஞனே யாவான்...'

2. 'செந்தமிழ்ச் சொற்கள் தீப்பந்தங்களாகவே மாறிச் சுடுகின்றன.

3. 'போர் எழுச்சிப் பாடல்கள், எரிமலை வெடித்து கக்கும் தீப்பிழம்பாகவே மாறி விடுகின்றன...'

உன்னத நயம்: காலத்திற்கும் கருத்துக்கும் ஒவ்வாதனவற்றை— முடைநாற்றம் வீசுகின்ற மூடப் பழக்க வழக்கங்களை— பழமையை அழித்துப் புதுமையைப் படைக்கும் புத்துலகச் சிற்பி கவிஞனேயாவான். உண்மையான கவிஞன் பண்பாட்டின் சின்னமாகப்—பண்பாட்டின் கருவூலமாக— விளங்குவான். தமிழகத்தைப் பொறுத்தவரை, கவிஞர்களுக்கு நீண்ட நெடுநாள் பாரம்பரியமுண்டு; மரபுண்டு. தமிழ்மொழி காலத்தாலும் கருத்தாலும் மூத்தமொழி. அது, 'முன்னைப் பழமைக்கும் பழமையதாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்த்' திகழும் பொற்புடைய மொழி; காலத்தால் முதுமையெய்தாக் கட்டழகு வாய்ந்த மொழி.

தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரை, இருபதாம் நூற்றாண்டு ஒரு மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிய நூற்றாண்டு எனலாம். இந் நூற்றாண்டின் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு — மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு—வித்தூன்றியவர் 'செந்தமிழ்த் தேர்ப்பாகன்' பாரதி. பாரதிக்குப் பின், செந்தமிழ் இலக்கிய உலகில், தன்மான இயக்கத்திற்கும், பகுத்தறிவுக் கொள்கைக்கும், இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்க் கவிதை உலகிற்கும் செயற்கரிய பெருந்தொண்டு செய்தவராகப் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைக் குறிப்பிடலாம்.

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு பொற்காலம் எனினும், தமிழில் பாரகாவியங்கள்—மாகாவியங்கள் வெளிவரவில்லை. பாரதியும், பாரதிதாசனுங் கூட மாகாவியங்கள் ஏதும் செய்யவில்லை. இந்நிலை தமிழ் நாட்டில் மட்டுமல்ல. இந்திய நாட்டில். பொதுவாக எந்த மொழியிலும் பாரகாவியங்கள் வெளிவரவில்லை. இலக்கிய நோபல் பரிசு பெற்ற வங்கப் பெருங்கவிஞர் தாகூர் கூட ஒரு பெருங்காவியத்தைச் செய்யவில்லை.

புரட்சிக் கவிஞர் 'வீரத்தமிழன்' என்னும் தலைப்பில் ஓர் அருமையான பாடலைத்—தென்னிலங்கை இராவணன் பற்றியதோர் அழகான படப்படிப்பைத் தந்து உதவினார். பின்னர், பாவேந்தர் கருத்திற்கேற்ப எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தினும் பழுத்த 'வாய்மொழிப்பாவலர்' ஆன புலவர் குழந்தை அவர்கள், இராவணனின் ஏற்றம் கூறும் 'இராவண காவியத்தை' இயற்றித் தந்து, இருபதாம் நூற்றாண்டில் மாகாவியங்கள் வெளிவரவில்லல என்ற குறையை நிறைவு செய்தார்கள்.

'என்றுமுள தென்றமிழால்', 'செவிநுகர் தீங்கனிகள்' தந்த கவியரசன்—ஆம்! பன்னீராயிரம் பாடிய கம்பன், 'ஆசை பற்றிய அறையல்' லுற்ற 'இராமகாதை'யில், வீரத் தமிழனை— அரும்பெருந்திறல் வாய்ந்த தென்னிலங்கை இராவணனை, 'இரக்கம் என்றொரு பொருளிலா அரக்கர்'

தம் தலைவனாக்கினான்; இராமனைத் தெய்வமாக்கினான். கவியரசன் கம்பன் கற்பித்த மாசினைப் போக்கிப் புலவர் குழந்தை அவர்கள், 'மாசறு பொன்'னாக, 'வலம்புரி முத்தாக', 'மாசிலாத் தமிழ் மாக்கதை'யாக இராவண காவியத்தை இயற்றித் தந்தார். இதனைப் பாவணமல்கும் 'இராவண காவியம்' என்றே புரட்சிப் பாவேந்தர் மகிழ்ந்துள்ளார், பாராட்டி!

ஆரியப் பண்பாட்டிற்குக் கைலாகு கொடுத்து வர வேற்றுச் செந்தமிழ் மக்களிடையே அதைத் திணிக்க உதவும் 'இராமகாதை'யை கம்பன் இயற்றிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், அவ்வாரியப் பண்பாட்டைத் தடுத்துத் தமிழர் பண்பாட்டைத் திராவிடர் நாகரிகத்தைக் காக்கும் நோக்கத்தோடு புலவர் குழந்தை அவர்கள் இராவண காவியம் இயற்றியுள்ளார்.

இருபெரும் புலவரும் காவியம் இயற்றினர். ஒருவர் 'இராமாயணம்' எழுதினார்; இன்னொருவர் 'இராவண காவியம்' இயற்றினார். முன்னவர் 'ஆரியமாயைக்கு' ஆட்பட்டவர்; பின்னவர் தமிழ்ப் பண்பாட்டிற்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டவர்; அதுமட்டுமன்று, தமிழினம்—தமிழ்ப்பெரு மக்கள் ஆரியத்திற்கு அடிமைப்படும் இழிநிலை கண்டு இதயம் கொதித்தவர்; கொத்தடிமை நிலை கண்டு குமுறி எழுந்தவர்—காழ்ச் சிந்தை கொண்ட கன்னித் தமிழ்ப் புலவர்.

வால்மீகி இராமாயண மூலத்திலிருந்து கம்பன் தனது இராமாயணக் கதையைப்—பாத்திரங்களைப் படைத்தான் எனினும், தமிழ்ப் பண்பாடு என்று தான் கருதியதற்கேற்பப் பல மாறுதல்களையும் ஆங்காங்கே செய்து தமிழுணர்வினைக் காட்டியுள்ளான். வருணனைகளும், சொல்லாட்சியும் விரவியுள்ள கம்பனின் சுவைமிகு செந்தமிழ்ச் செய்யுட்களை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட நம்மால் இயலாது. ஆயினும் பன்னீராயிரம் பாடிய பாட்டரசன் கம்பன் எழுப்பாத இன்றமிழ் உணர்வை எழுப்பியவர், தமிழின் அருமையை — இனிமையை —

ஏற்றத்தைப் பெருமையைத் தனிப் பெருந்தன்மையை உணர்த்தியவர், கம்பனின் இராமாயணத்தை இராவண காவியமாக மாற்றியமைத்ததன் மூலம் செந்தமிழ்ப் பெரு மக்களின் சிந்தனைத் தீயை நெய்யூற்றி வளர்த்தவர் புலவர் குழந்தை அவர்கள்.

இராவண காவியம், பெருங்காப்பிய நிலைகளைச் சிறிதளவும் வழுவவிடாமல் மரபு நிலைகளை மாண்புறக் காத்துநிற்கிறது. இது, தமிழில் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்களையும், இராமாயணம், பாரதம், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் ஆகியவற்றின் இலக்கிய நயங்களையும் விஞ்சிய கலைநயமும், காவிய அழகும், உணர்ச்சிப் பெருக்கும், ஓசையின்பமும் கனிந்து மிளிரும் ஒரு பெருங் கருவூலமாகத் திகழ்கிறது. இந்நூல், சொல் லோசைப் பாடல்களின் சுரங்கமாக விளங்குகிறது.

இராமாயணத்தின் காவிய நாயகன் இராமன், இரா வண காவிய நாயகன் இராவணன். எனவே, இராவண காவியம் தெற்கேயிருந்து எழுகிறது. ஐந்து காண்டங்கள் —57 படலங்கள்—3,100 பாடல்களும் தமிழ் தமிழ் என்றே முழங்குகின்றன. இந்நூல் ஒரு கற்கண்டுக் கட்டி. தெவிட்டாத தேனாற்று வெள்ளம். அதில் சில துளிகளை நாம் இங்கே சுவைத்து மகிழலாம்.

பழந்தமிழகத்தின் கல்விநிலை பற்றி ஆசிரியர் பாடுகை யில் தாய் மொழிப் படலத்தில்:

நாடெல்லாம் புலவர் கூட்டம்
நகரெல்லாம் பள்ளிவீட்டம்
வீடெல்லாம் தமிழ்த்தாய்க் கோட்டம்
விழாவெலாந் தமிழ்க்கொண் டாட்டம்
பாடெலாம் தமிழின் தேட்டம்
பணையெலாந் தமிழ்க்கூத் தாட்டம்
மாடெலாந் தமிழ்ச் சொல்லாட்டம்
வண்டமி ழகத்து மாதோ.

கொலைவா ணர்விட்ட கணைமார் புதொட்ட
குறியா லேபட்ட மகனே
மலைவா ணரிட்ட குலைவா ழைபட்ட
வடிதே னைவிட்ட மலர்போல்
கலைவா ணரட்ட விழி மீ துபட்ட
கள் மீ துசொட்ட கலுழி
அலைவா ணர் விட்ட கலமீ துபட்ட
வலையோய் வு பட்ட தடடா!

அத்தனை பாடல்களும் ஒளி முத்துக்கள்.

இந்நூலுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அரும் பெரும் ஆராய்ச்சி முன்னுரை வழங்கி உள்ளார்கள். அதில் அவர்கள், 'இந்நூல் பழமைக்குப் பயணச்சீட்டு; புதுமைக்கு நுழைவுச்சீட்டு; தன்மான இயக்கத்தார் தமிழ்ப்பகைவர்கள், காவியம் அறியாதவர்கள், கலை உணர்ச்சி இல்லாதவர் என்ற அவமொழியினை அடித்துத்துரத்தும் ஆற்றலாயுதம், தமிழ் மறுமலர்ச்சியின் தலைசிறந்த நறுமலர்; நெடு நாள் ஆராய்ச்சியும், நுண்ணிய புலமையும், இனப்பற்றும் ஒருங்கமைந்த ஓவியம்! தமிழரின் புது வாழ்வுக்கான போர் முரசு; காவிய உருவில் ஆரியத்தைப் புகுத்திவிட்டோம்; எனவே, இது அழிந்து படாது என்று இறுமாந்திருப் போர்க்கு ஓர் அறைகூவல்! தமிழருக்கு உண்மையை உணரு மாறு கூறும் ஓர் அன்பழைப்பு; தமிழரசுக்குக் கால்கோள்; விடுதலைக் கீதம் என்று பாராட்டுகிறார்கள்.

முன்னைச் ''சென்னை ராஜய'' ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்தோர், தமிழரசுக்குக் கால்கோள் செய்யும் இவ் விடுதலைக் கீதத்திற்குத்தடைவிதித்து நூல்களைப்பறிமுதல் செய்தனர். இப்போது ஏறத்தாழ 23 ஆண்டுகட்குப் பிறகு, நாலரைக்கோடி தமிழர்களின் இதய தெய்வமாக விளங் கும் பேரறிஞர் அண்ணா அமைத்துத் தந்த இன்றையத் ''தமிழ் நாடு'' அரசு, 'சென்னை ராஜ்ய' அரசு விதித்த தடைத்யுதிரவை நீக்கியுள்ளது. ஆம்! தடை நீங்கி,

'முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் ஒரு முழுமதி' போல, இப்போது 'இராவண காவியம்' — இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது.

''வாழ்க செந்தமிழ்ப் பெரும் புலவர் குழந்தை'' எனச் சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகிறேன். வணக்கம்.

கண்டு சிரித்திட்டார் அண்ணா!

உவமை : 'சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல் போல்
நயன்மிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா—'

உன்னதநயம்: 'மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும்'
அரசியல் பண்பினை—போதிக்கும் அழகே......
''மறப்போம்—மன்னிப்போம்''
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!

எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா—
அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்பால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா—
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனியாய் ஈன்றெடுத்தத் தம்பிகளே
என அழைத்து
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த்
தேன்பாகாய் அன்புகாட்டி
பனிமலர் வீழ்த் தும்பிய தாய்த் தழுவிக்
கொண்டார்.

அண்ணாவின் பெயர் மாற்றத் தீர்மானம்!

உவமை: 'அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர் போலக் கொள்கையற்றோர்
வீழ்ந்து போனார்.'

உன்னத நயம், சொலல் வல்லார் சேதுப் பிள்ளைதனை
சோமசுந்தர பாரதியைச் சொற் போரில்
சொக்க வைத்தார்—பாவம்;
சிக்க வைத்தார்!
நீதிக்கட்சியென்று நெடிய மதில் சுவருக்
குள்ளே—பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகா தெனும்
கொள்கையாலே—அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தை
யென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டு
விட்டார் அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர் போலக் கொள்கை
யற்றோர் வீழ்ந்து போனார்
தீரர் அண்ணா திராவிடர் கழக மெனும்
பெயர் மாற்றத் தீர்மானம்—
வீரர்கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்.

அன்றே சொன்னார் அண்ணா!

உவமை : 'அண்ணன்—அய்யா உறவினிலே கீறல் விழ
அது நாற்பத் தொன்பதாம் ஆண்டினிலே
பிரிவாய் மாறி
முகில் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச் செய்தார்.'

உன்னத நயம்: அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றியபோது
துன்ப நாளென்னும்பெரியார் அறிக்கையை
மறுத்துத்

தொடங்கினார் போரை!
இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணா, அன்றே சொன்னார்...
அன்று முதல், அண்ணன்—அய்யா
உறவினிலே கீறல் விழ
அது நாற்பத் தொன்பதாம் ஆண்டினிலே
பிரிவாய் மாறி
முகில்கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச்
செய்தார்!

அண்ணா, செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்!

உவமை: ‘பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பதுபோல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்.’

உன்னதநயம்: தலைவருடன் கூடி வாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன்
வெளியே வந்தும்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று
சொன்னார்

அது
நேற்று சொன்னது போல் இருக்கு தம்பி!
தலைவரில்லா முன்னேற்றக்கழகத்துக்கு
—என்
தலைவர் இருந்த நாற்காலி, காலியாக
இருக்கும் இதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்...
அதுவரையில் காத்திருப்பேன் என்றார்
பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப்பனிநீர் வடிப்பதுபோல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்
கண்ணீர்த் துளிகளே! நாட்டின்
கண்மணிகளே! என அழைத்து:
செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்!

மகாத்மாவின் தோன்றல் அண்ணா!

உவமை: 'பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் பாராள வந்த
கதை?''

உந்த நயம்: யாரேனும் பகர்ந்த துண்டோ?
யாரேனும் கேட்ட துண்டா?
'பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் பாராள
வந்த கதை?
ஈராண்டு முடியவில்லை எம் அண்ணா—
ஆட்சியேற்று
சீரார்ந்த செயல் பலவும் செய்தலுற்றார்
ஏரார்ந்த உழவர்க் கெல்லாம் ஏற்றம் தந்து
எழில்வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி.
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்

இணையற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்
இதுபோல் வாழ்வில் என்றும் கண்டதில்லை யென
ஊர்மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி.
ஆந்திரத்துப் பிரம்மானந்த ரெட்டிகாரும்
ஆகா—நீதானே அசல் காந்திய வாதியென்று
ஆராதனை செய்திட்டார்—ஆண்டொன்று
கழியவில்லை

மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர்—பல
மாநிலத்தில் கைகழுவி கலயம் கட்டிவிட்டார்
மரங்களிலே
மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று!

தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள் தமிழ் அன்னை!

உவமை; விண்முட்டும் மலையோரம்—நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம்போல
பண்பட்ட தமிழர் வாழ்வில்—முதுகில்
புண்பட்ட கொள்கை யெல்லாம் மூண்டதந்தோ!'

உன்னத நயம்: கிரியென்றால் மலையன்றோ—அந்த
மலைதழுவும் முகிலானார் நம் அண்ணா
வி.வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது.

பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார்-அன்று
தென்னாட்டுச் சிகரமாக
இருந்திட்டார் — அண்ணன்பற்றி
என்ன சொன்னார்?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார்—அண்ணா
பழந்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார்.

அந்த
மறைமலை தந்த புகழ் மொழி ஆயிரம்
பசுமலை பாரதி — பாண்டியன் தோற்றம்—
அவரை

நாவலர் என்று நாடே அழைக்கும் — அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ் நிலம் காக்க — மன
அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அண்ணா
ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்று போல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள்.
கலை மகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலை மகனாய்ப் பெற்றெடுத்தாள்
மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப் போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான் — மாந்தரெல்லாம்
களித்திட்டார்.
'விண் முட்டும் மலையோரம் — நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சு
மரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் — முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்ட தந்தோ!'

கவிஞர் கண்ட அண்ணா
வானொலி — அண்ணா கவிதாஞ்சலி

பாதியிலே வந்ததம்மா பல கோடி சாதிகள்!

உவமை : 'மழையற்றுப் போன வயல் போல
மாறிற்று தமிழர் மனம்.'

உன்னத நயம் : சாதிகளைக் காணாது குறள் ஒலித்த
தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள்
அற்றுப் போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்
கண்டு விட்டார்.

மொழி யுணர்வே இல்லாத வாயுணர்வின்
மாக்கள்—தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று
இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட
பெரு நிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார் பிழை குவித்தார்
மழையற்றுப் போன வயல் போல மாறிற்று
தமிழர் மனம்.
அழுக்காறு—அவா—வெகுளி—இன்னாச் சொல்
நான்கு மின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார்
சில தமிழர்
பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை யென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில்—
இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை — சோகப்பாட்டுப்
பாடினாள் தமிழன்னை — சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை —
ஓடினாள் ஓடினாள்
ஒருவழியும் கிடைக்கவில்லை.

அறிவு மன்னனாக அண்ணா பிறந்திட்டார்!

உவமை : 'ஆல'

விழுதனைய கைகளாலே அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே
எனப்புகழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரித்துத்
துள்ளி எழ...

உன்னத நயம் : 'புவியூர் விட்டு புகழூரில் வாழுகின்றான்
கவியூரின் பெரு வேந்தன் குறளாசான்.
ஆண்டு சென்று அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்'
என்றாள்.

என்னம்மா என்றான் குறளோன்
தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றாள்
தங்கம் எடுக்கவா? என்றான்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்றாள்
இன்றென்ன ஆயிற்றென்றான்
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்
சென்றடையக் குடில் இல்லை ஏழைக் கென்றாள்
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற் றென்றாள்;
கற்றனையோர் வீணில் அறிவில் கதைக்கின்ற கதையும்,
சொன்னாள்.

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்ப தென்றான்
தொழுத மகன் உச்சி மோந்து, —'ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே எனப்புகழும்
உழவன் போல் உள்ளமெலாம் பூரித்துத் துள்ளி எழ,
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக' என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக—!

'அண்ணா' எனற ஒரு சொல்லால்...

உவமை : 'கீழ்
வானுதித்த கதிர்போல—
புரியா தோர்க்கு ஒரு புதிர் போல
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த நானும்...'

உன்னதநகயம்: பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின்
புதுமணமாய்

பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன்-கீழ்
வானுதிர்ந்த கதிர் போல
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை
தலைவரென் பார் தத்துவ மேதை என்பார்
நடிகர் என்பார் நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல்
பெற்றார் என்பார்.

மனிதரென்பார் மாணிக்க மென்பார்
மாநிலத்து அமைச்சரென்பார்
அன்னை யென்பார் அருள்மொழிக் காவல்
என்பார்
அரசியல் வாதி என்பார்—அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்
நெஞ்சத்து அன்பாலே
'அண்ணா' என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக் கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பர்க்கும் சிலை

தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும்
சிலை
பத்து சிலை வைத்ததினால் அண்ணன்
தமிழின்பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய;
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது...
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்...
ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்—
அய்யகோ, இன்னும்
ஓராண்டே வாழப்போகிறேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது.

கவிஞர் கண்ட அண்ணா
அண்ணாவின் கீதாஞ்சலி

உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!

உவமை; ‘உன் கண்ணொளியின் கதகதப்பில்
வளர்ந்தோமே;
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி
விட்டாய்?

உள்ளதாயம்; எம் அண்ணா... இதய மன்னா
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று பகர்ந்தாயே
எமைவிடுத்துப் பெரும் பயணத்தை ஏன்
தொடர்ந்தாய்...
‘உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி
விட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய் விட்டாய்;
நியாயந்தானா?

கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச் சொல்லி,
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக்கொண்டாய்?
விரலை அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே, அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்...
இன்று
மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை?
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்—
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா;
எழுந்துவா எம் அண்ணா!...
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதியெமக்குத் தெரியும்
அண்ணா...
—நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்...
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா
நான் வரும்போது கையோடு கொணர்ந்து
இல்லை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!...

இருள் கிழிக்கும் உதய சூரியன், நம் அண்ணா!

உவமை : 'எழுத்திலே தேன் இல்லை! தேள்! தேள்!
பேச்சிலே கற்கண்டில்லை; தலையில் போடும்
கற்குண்டு! கற்குண்டு
கவிதையிலே அமுதம் எங்கே? ஆலகாலம் பெருகி
விடுகிறது!
கற்பனையில் கவியுமில்லை; சுவையுமில்லை!'

உன்னத நயம் : 'எழுத்திலே தேன்— பேச்சிலே கற்கண்டு —கவிதையிலே அமுதம்— கற்பனையிலே கனிச்சுவை—'

இத்தனை சுகத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் போதே ஒரு சுழல்! பெரும் சுழற்சி! தலைகீழ் மாற்றம்!

மனப்புயல்!

தடுமாற்றம்!

காரணம்—

''தம்பி!'' என்று அழைத்திடும் பலாப்பழத்துத்தேன் சுவையெனும் அழைப்புக்கு அனைத்து உரிமையும் பெற்ற வரான நம் ஆவிநிகர் அண்ணனை... அந்த அறிவுப் புதையலை...மண்டும் மதங்கள் அண்டா நெருப்பை...படரும் சாதிப்படைக்கு மருந்தை... கற்பூரச் சொற்கோவை... நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவை நாம் இழந்து விட்டோம்!

எழுத்திலே தேன் இல்லை! தேள்! தேள்!
பேச்சிலே கற்கண்டில்லை; தலையில் போடும்
கற்குண்டு! கற்குண்டு!
கவிதையிலே அமுதம் எங்கே; ஆலகாலம் பெருகி
விடுகிறது

கற்பனையில் கவியுமில்லை; சுவையுமில்லை!
தமிழகத்தை அடிமைக் காடாக்க—
தமிழைத் தாளில் போட்டு மிதிக்க—
தமிழர்களின் உரிமைகளைக் கொய்திட—
தருக்கர் மொழி இந்திக்குப் புதுத் தகுதி பெய்திட—

டெல்லிப் பட்டணத்திலே சதிவலை பின்னப்பட்ட போது அந்த இருள் கிழிக்கும் உதயசூரியனாய்த் திகழ்ந்திட்ட நம் அண்ணன்— இதய மன்னன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் இன்றும் நம் இதயத்தினுள்ளே எதிரொலிப்பதனை அண்ணனின் அன்புக் கயிற்றிலே ஆடும் பம்பரமாய் விளங்கிய நம்மால் உணர முடிகிறது.

எதிரியை அலட்சியப் படுத்தக் கூடாது!
வெற்றிப் பெருமிதத்தில் ஏமாந்துவிடக் கூடாது!
நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று காலம் கடத்தி விடக்கூடாது!
நமக்கு நல்வாழ்வு தந்திட்ட வாசகங்கள் அல்லவா இவை?
தமிழகத்தின் தளையகற்ற முகிழ்த்திட்ட அந்தத் தலைமகனுக்கு—
அறியாமை இருள் அழித்த
அறிவெழுச்சிக் கதிர் விரித்து
பேராற்றல் பெருந்தகைக்கு—

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்பதற்கு இலக்கணம் போல் தோன்றியதும் நம் அண்ணன்—தாரகை நடுவே தண்மதிபோல உயிர் தமிழாக உலகில் உலவுகின்றார் இன்று!

ரயில் ஒரு பெருமூச்சு விட்டுப் புறப்பட்டது!

உவமை : 'என் கல்லறை மீது என் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் சிந்த வேண்டும். அந்தக் கண்ணீர்த்துளிகளை விடச் சிறந்த மலர்மாரிவேறு இல்லை, எனக்கு!?

உன்னத நயம் : பிறந்து வளர்ந்த திருக்குவளையிலிருந்து திருவாரூருக்கு வந்தார் சிறுவரான கலைஞர், பள்ளியில் சேர! ஆனால், அவரது திறமையைச் சோதித்த தலைமை ஆசிரியர் அவரை ஐந்தாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள மறுத்து முடியாது என்று கூறி விட்டார்.

இந்த அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை கலைஞரால். ''என்னை ஐந்தாம் வகுப்பில் சேர்க்கவில்லையென்றால், எதிரேயுள்ள குளத்தில் விழுந்து உயிரைவிட்டு விடுவேன்'' என்று ஓர் அறப்போர்ப் பிரகடனத்தை வெளியிட்டார் சிறார் ஆன கலைஞர். முடிவு—அவர் வெற்றி பெற்று, ஐந்தாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார். முதன் முதலில் அறப்போரில் முழு வெற்றி பெற்றார்.

அந்தப் போர் உணர்ச்சியின் வளர்ச்சிதான் கல்லக்குடி போராட்டத்தில் தலையைத் தண்டவாளத்தில் வைத்து படுக்கச் செய்து வெற்றி பெறச் செய்தது. அவ்வுணர்ச்சி மேலோங்கி இருந்ததால்—நிறைந்திருப்பதால்தான் தி.மு. கழகம், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தலைவராக இவரைத் தேர்ந்து எடுத்து வெற்றி வாகை சூட்டியுள்ளது.

கல்லக்குடி போராட்டத்தில் கலந்துகொண்டு ஆறு மாத சிறைத் தண்டனை பெறுவதற்கு முன், போராட்டத்தின்போது ரயிலுக்குமுன் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்துவிட்டார் கலைஞர். அவருடைய அருகில் அவரது நண்பர் திருமிகு முல்லை சக்தியும் படுத்திருந்தார். ரயில் புறப்படுவதற்கான மணி அடிக்கப்பட்டது! 'கார்ட்' விசில் ஊதினார். பச்சைக் கொடி வீசப்பட்டது. ரயில் ஒரு பெருமூச்சு விட்டுப் புறப்பட்டது! அப்போது கலைஞர் நண்பரைப் பார்த்து, ''சக்தி! கண்களை அகல விரித்து அகிலத்தை ஒரு முறை பார்த்துக் கொள்ளுங்கள்... ரயிலின் இரும்புச் சக்கரங்கள் நமது கழுத்துகளைத் துண்டிக்கப் போகின்றன. தாயகத்திற்காக நாம் உயிரை நமது பலியாகத் தந்தோம் என்ற பெருமையுடன் சாவோம்'' என்றார்! மேலும் அவர்,

'தமைக்காத்த தலைவன் கண்களில் நீர் பெருக்கெடுக்கு மாறு ஏற்படுகின்ற கனச்சாவை யாசித்தாவது பெறுதல் வேண்டும்' என்ற குறள் மொழிக்கொப்ப, ''என் கல்லறை மீது என் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் சிந்தவேண்டும். அந்தக் கண்ணீர்த் துளிகளை விடத் தரணி யில் சிறந்த மலர் மாரி வேறில்லை, எனக்கு! இதுதான் எனது ஆசை! ஒரே ஆசை! தணியாத ஆசை!'' என்று கூறுகின்றார் நெஞ்சுறுதியுடன் நம் கலைஞர் அவர்கள், அன்று!

நிதி தேவை என்றால் வேண்டும் நிதி!

உவமை ; 'அழகிய மலரில் உள்ள அருந்தேனை வண்டு சேகரிப்பதுபோல, அவர் கழகத்திற்கு நிதி சேர்ப்பார்'.

உன்னத நயம் : அறிஞர் அண்ணா ஒரு சமயம்; 'நம் மிடம் இருப்பது கழகத்தில், ஒரே நிதி—அது கருணா—நிதி' என்றார்! இது வேடிக்கையாகக் குறிப்பிட்டது மட்டுமல்ல, உண்மையும் இதில் உள்ளது.

அன்று தி.மு.கழகத்திற்கு அவர் பொருளாளர். கழகத் திற்கு நிதி தேவையென்றால், அதை அவரிடம்தான் ஒப்படைப்பார் அறிஞர் அண்ணா.

நண்பர்கள் அப்போது வேடிக்கையாகக் குறிப்பிடுவர். 'ஐதராபாத் நிஜாம்' அயர்ந்து தூங்கிக் கொண்டிருந் தாலும், காலணா ஓசை காதில் கேட்டால் கடுகுப் பொழு தில் விழித்துக் கொள்வாராம். கருணாநிதிக்கு அது கூடத் தேவை இல்லை, நிதி என்றால் போதும்— எங்கே என்று பறப்பார்' என்று! இது முழுக்க முழுக்க உண்மை. முற்றிலும் அவர் கழகத்திற்கு நிதி சேர்ப்பதில், கெஞ்சலும் உண்டு, மிரட்டலும் உண்டு.

புயல் நிவாரண நிதி சேர்த்துக் கொண்டிருந்த வேளை, கலையுலகில் அன்றைய தினம் கவின்ஒளி சிந்தி பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு நடிகை வீட்டிற்குச் சென்றார் கலைஞர், நிதி கேட்க. அவருக்கும் அந்த நட்சத்திர நடிகைக்கும் நேரடி அறிமுகம் கொஞ்சமும் கிடையாது. இருவருமே கலையுலகில் சம்பந்தப்பட்டிருந்ததால், ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து இருந்தார்கள். கலைஞர் வந்திருக்கிறார் என்பதை அறிந்து அந்த நடிகையார் உடன் வந்து நேரில் வரவேற்றார்கள். இவர் நிதி என்று நாசூக்காகப் பேசினார். அந்த நட்சத்திர நடிகை அவசரமாக நம் கலைஞரிடம் ஒரு தொகைக்கு காசோலை-'செக்' எழுதித்தந்தார். , அதில் மிகக்குறைந்த தொகை எழுதப்பட்டிருந்தது என்பது கலைஞரின் எண்ண மானது திண்ணமாக! எனவே அவர் காசோலையைத் தூக்கி எறிந்து ''அழகிய மலரில் உள்ள அருந்தேனை வண்டு சேகரிப்பது போல் அரும்பாடு பட்டு புயல் நிவாரண நிதி சேகரித்துக் கொண்டிருக்கிறேன். வசூல் செய்த தொகை கழகத்தின் சார்பில் வழங்கப்படும். இந்தக் குறைந்த தொகை காசோலை பெற இங்கு வரவில்லை'' என்றார். நொடிப் பொழுதில் அந்நடிகை தன் தவறை உணர்ந்து உளமார வேறு காசோலை கொடுத்தார்— நகைத்துக்கொண்டே, ஆயிரம் ரூபாய்க்கு!

பதில் வழங்குவதில் பலே வல்லவர்

உவமை : ''வீணை, மீட்டப்படுவதற்கு முன் அதற்கு வீணை என்று பெயர் இல்லையா? வாள் வீசப்படுவதற்குமுன் அதற்கு வாள் என்று பெயர் இல்லையா? அதுபோல போராட்டம் தொடங்குவதற்குமுன் அதற்கான படை வீரர்களைத் தயாரிப்பவர் தளபதி, எங்கள் அறிஞர் அண்ணா'' என்றார்.

உன்னதநயம் : நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுக்கு 'தூக்குமேடை' என்ற நாடகத்தை எழுதிக் கொடுத்து, ராதாவுடன் கலைஞரும் சேர்ந்து நடித்துவந்தார். அது தந்தை பெரியார் காலம். ராதாவுக்கு அறிஞர் அண்ணா மீது கோபம். அந்தக் கோபத்தில், ராதா ''தூக்குமேடை—கதை வசனம் அறிஞர் கருணாநிதி'' என்று எழுதிய போர்டு களை நகரமெங்கும் தொங்கவிட்டுவிட்டார். அறிஞர் அண்ணா அவர்களுக்குரிய சிறப்புப் பெயரைத் தான் பெறுவதா என்று கலைஞர் அவர்களின் குருதி கொதித்தது. இந்த விளம்பரத் தட்டிகளை அப்புறப்படுத்தினாலன்றித் தான் நாடகத்தில் நடிக்க முடியாது என்று கூறிவிட்டார். வேறு வழியில்லாமல், ராதா அந்தத் தட்டிகளை அப்புறப் படுத்தினார். அதன் பின்னர்தான் கலைஞர் அவர்களும் நடித்தார் நாடகத்தில்!

ராதா வைதீகர் வேடத்தில் அந்நாடகத்தில் அபிநேச முதலியார் என்ற பாத்திரத்தில் நடித்து வந்தார். புதுமை விரும்பும் பாண்டியனாக—மாணவனாக கலைஞர் நடித்தார்.

அப்போது 'தளபதி' என்று அறிஞர் அண்ணா அவர்கள் மக்களால் அழைக்கப்பட்டு – மதிக்கப்பட்டும் வந்தார்கள். இதைக் கேலி செய்யும் வகையில் ஒரு நாள் நாடகத்தில், திடீரென்று சுயவசனமாக, ''ஏண்டா! தளபதி அண்ணா என்கிறீர்களே! உன் அண்ணன் எத்தனை போர்க்களத் திற்குச் சென்றான்? எந்தக் கோட்டையைப் பிடித்தான்? எத்தனை பேரைக் கொன்றான்? எவ்வளவு பிணத்தின்மேல் நடந்தான்?'' என்று ராதா, வைதீகர் அபிநேச முதலியார் வேடத்தில் கேட்டார்.

அங்ஙனமே கலைஞர் அவர்கள், புதுமை விழையும் மாணவர் பாண்டியன் வேடத்தில் இருந்து ''வீணை, மீட்டப்படுவதற்கு முன் அதற்கு வீணை என்று பெயர் இல்லையா? வாள் வீசப்படுவதற்கு முன் அதற்கு வாள் என்று பெயர் இல்லையா? அதுபோல போராட்டம்

தொடங்குவதற்கு முன் அதற்கென படைவீரர்களைத் தயாரிப்பவர் தளபதி— எங்கள் அண்ணா'' என்றார். கொட்டகையே அதிர்ந்தது— கையொலியால்!

தம் தலைவரைத் தாக்குபவர்களுக்கு, அவர் எந்த இடத்தில் இருந்தாலும் இன்னின்ன முறையில் இடியென சுடச்சுடப் பதில் வழங்குவார். தன்னையோ, அல்லது தம் தலைவரையோ, அல்லது தமது கொள்கையையோ தாக்கு பவர்களுக்கு தக்க பதில் வழங்குவதில் பலே வல்லவர் கலைஞர் ஆவார்.

அவரின் சொற்களாலேயே பதிலடி கொடுத்தார், டாக்டர் கலைஞர்

உவமை : 'பழம் பெரும் மூவேந்தர்களின் ஆட்சியில் பொன்மலைக் குன்றுபோல் பொருள்வளம் குவிந்து, மண் பூமி மாண்புமிகு சீரும் சிறப்பும் பெற்று இருந்ததைப் போல் இப்போதும் உருவாக்க வேண்டும்...'

உன்னத நயம்; ஒரு முறை சட்டசபையில்......

நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம், ''பேயை விரட்டு வதைப் போல் திராவிட நாட்டை விரட்ட வேண்டும்'' என்று உரையாற்றினார்.

கலைஞர் அவர்கள் உடன் குறுக்கிட்டு, ''சென்னையில் பேய் விரட்டுவதாகக் கூறி ஒரு பெண்ணைக் கட்டி வைத்து அடித்த பூசாரி ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?'' எனக் கேட்டார்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திருமதி. குழந்தை அம்மாள் பேசும்போது, ''தமிழர்கள்—சேர சோழ பாண்டியர்கள் மண்ணுக்காக – பொன்னுக்காக – பெண்ணுக்காக என்று சிறுசிறு விஷயங்களுக்காகக்கூடச் சண்டை போட்டுக் கொண்டார்கள். அவர்களது ஆட்சியும் மறுபடியும் வரவேண்டும் என்று தி.மு.க.வினர் கூறி வருகிறார்கள். இந் நாகரிகமான காலத்தில் அப்படிப்பட்ட ஆட்சி வரலாமா?'' என்று குறிப்பிட்டார்கள்.

மறுநாள் கலைஞர் மன்றத்தில் ஒரு புத்தகத்தைக் காட்டி ''இது தமிழ்ப் பாடப் புத்தகம். இதிலே பொற்கைப் பாண்டியன் கதை இருக்கிறது. தவறாகக் கதவைத் தட்டிவிட்ட பொற்கைப் பாண்டியன், தனது கையையே வெட்டித் துண்டித்துக்கொண்டு நீதி காத்தான் என்று எழுதப் பட்டுள்ளது. மற்றொருபக்கத்தில் சேர, சோழ, பாண்டியர்களென்று மூவேந்தர்கள் அந்தந்த நாட்டைச் சீரோடும், சிறப்போடும் ஆண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் ஒரு பக்கத்தில் பேகன் என்ற வள்ளல் மயிலுக்கு ஆடை கொடுத்தான்; அவன் சிற்றரசன் மட்டுமல்ல, கல்வி கேள்வி உள்ளவன் என்பது மட்டுமல்ல, வள்ளலாகவும் இருந்தான் என எழுதப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தை எழுதியவர் யார் என்று கேட்டால், இந்த நாட்டை – தமிழகத்தை நாம் 'பழம் பெரும் மூவேந்தர்களின் ஆட்சியில் பொன்மலைக் குன்றுபோல் பொருள்வளம் குவிந்து, மண்பூமி மாண்புமிகு சீரும் சிறப்பும் பெற்று இருந்ததைப் போல இப்போதும் உருவாக்கவேண்டும்' என்கிற எங்களது உரையாடல்களுக்கு கருத்திற்கு மாறாக நேற்று இந்த சட்ட மன்றத்தில் சேர, சோழ, பாண்டியர்களைப்பற்றிப் பழித்துப் பேசிய குழந்தையம்மாள் தான்; இப்புத்தகத்தின் பெயர்; 'திராவிட மணிமலர் வாசகம்' என்பதாகும்'' என்று தாக்கியவருக்கு அவரின் சொற்களைக்கொண்டு பதிலடி கொடுத்தார், பக்குவமாக கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில்.

மறுமொழி கலைஞர் மடல்

உவமை; நிலவிற்குக் கணக்கில் அடங்கா நட்சத்திரங்கள் உள்ளன. ஆனால் சிற்சில நட்சத்திரங்கள்தான் நளினமாக நிலவிற்கு அருகில் இருக்கின்றன அல்லவா? அதுபோல்தான் நீங்கள் எனக்கு...'

உன்னத நயம்: ஒருமுறை ஒரு நண்பர், தன்னைக் கலைஞர் மறந்துவிட்டார் என்பதைச் சுட்டிக் காட்டி, 'வான மண்டலத்தில் சிதறிக் கிடக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களுக்கு இருப்பது ஒரே நிலவு; ஆனால், நிலவிற்கோ, எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கின்றன. அதுபோலத்தான் நானும் நீங்களும்'—என்று மடல் எழுதி இருந்தார்.

மறுமொழி கலைஞர் மடல்; 'நிலவிற்குக் கணக்கில் அடங்கா நட்சத்திரங்கள் உள்ளன. ஆனால், சிற்சில நட்சத்திரங்கள்தான் நளினமாக நிலவிற்கு அருகில் இருக்கின்றன அல்லவா? அதுபோல்தான் நீங்கள் எனக்கு...' என்று மடல் வரைந்தார் மறுமொழியாக!

வழக்கமாக கடிதம் வரையும் நண்பர்கள் மடல் எழுத மறந்துவிட்டால், 'மறதி மலையாகிவிட்டது; நினைவு துரும்பாகிவிட்டது; தங்களுக்குத்தான்!'—என்ற வாசகம் மட்டும் வரைந்த மடல் விரைந்து செல்லும் கலைஞரிடமிருந்து!

இவ்விதம் 'நறுக் நறுக்'கென்று நண்பர்க்கு கடிதம் எழுவதில் வல்லவர்க்கு வல்லவர் கலைஞர்.

★

கலைஞரின் முத்துக்கள்...

பெண்கள் : வாழ்வு ஒரு பூஞ்சோலை; அதில் பறந்து திரியும் கிள்ளைகள்தான் பெண்கள்!

பண்பு: பெண்களைப் போலத்தான் சில ஆண்களும்! பெண்ணின் அழகையும் 'மேக்-அப்'மையும் அளக்கிறார்களேயன்றி, உள்ளத்தை — அவளுடைய பண்பை அளப்பதில்லை.

பலி: சிலர் காதல் செய்யப் பழகிக் கொள்கிறார்கள்; பழக்குகிறார்கள். ஆனால், இதற்கு எத்தனை பேர் பலி ஆகிறார்கள் தெரியுமா?

மணம் : காம்பொடிக்கப்பட்ட குண்டு மல்லிகை மலர் செடியிலிருந்து பறிக்கப்பட்டதேயன்றி, அந்த மலரின் மணத்திலிருந்து பறிக்கப்படவில்லை. இன்றும் வாசனை வீசிக் கொண்டேதான் இருக்கிறது. மலரின் மணம் வீசுகிறது 'ஜாம்'—யென.

பசுமை : கிளி பாய்வதில்லையா மரத்துக்கு மரம்? எந்த மரம் பச்சையாக இருக்கிறதோ, எந்த மரத்தில் அதிகமாகப் பழங்கள் இருக்கின்றனவோ அந்த மரத்துக்குத்தான் தாவும் பச்சைக்கிளி.

மனங்குலைவதோ : நெருப்புக் குழியில் விழப் போகுமுன் அனலைக் கண்டு அஞ்சலாமா? கடலிலே குதிக்கத் தீர்மானித்தபின் அலையைக் கண்டா மனங் குலைவது?

பயன்படுத்தும் வகை: நன்மையும் தீமையும், எதையும் நாம் பயன்படுத்தும் வகையில்தான் இருக்கிறது.

விமானம் : ஆகாய விமானத்தில் ஏறி அணுகுண்டு போட்டு அகில உலகத்தையும் அழிக்க முடியும். அதே ஆகாய விமானம், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள நாடுகளுக்கு நல்ல முறையில், நீண்டநாள் பிரயாணமின்றிச் சீக்கிரமாக ஆட்களையும், அவசரத் தபால்களையும் கொண்டு செல்ல முடியும்.